9th November 1966]

100 பேர்கள் வந்தார்கள், கறுப்புக் கொடி காட்டினார்கள் என்றால், போலீஸார் செய்ய வேண்டியதைச் செய்யத் தவறி விட்டார்கள் என்பதற்குக் குறிப்பாக இந்த மன்றத்திலும் சரி, அல்லது பின்னால் எழுதி அனுப்பினாலும் சரி, அதைப்பற்றி விசாரிக்கத் தயாராக இருக்கிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஸார், இப்போது அங்கே மாவட்ட போலீஸ் பொறுப்பை ஏற்று இருக்கும் அதிகாரி, பொறுப்பை ஏற்ற பிறகு எதிர்க்கட்சிகளுக்குத் தொந்தரவு வருவதாக என் கட்சியைச் சேர்ந்தவர்களிடமிருந்தும் புகார் வந்திருக்கிறது. இப்போது அவர் செய்துகொண்டிருக்கிற காரியங்கள், எடுத்துக் கொண்டிருக்கிற நடவடிக்கைகள் எதிர்க்கட்சிகளுக்குப் பாதகமாக இருக்கிறது, ஆளும் கட்சியை ஆதரிப்பதாக இருக்கிறது என்று என்னிடத்திலும் தகவல் இருக்கிறது. இந்த நிகழ்ச்சி சம்பந்தமாக போலீஸார் தங்களுடைய கடமையைச் சரியாகச் செய்திருக்கிறார்களா என்று பரிசீலிப்பது நியாயம் என்று கருதுகிறேன். அப்படிப் பரிசீலிப்பார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எனக்குத் தெரிந்த வரையில் அங்கு இருக்கிற போலீஸ் அதிகாரி அப்படிப் பட்சபாதமாக நடப்பவர் அல்ல. காங்கிரஸ்காரர்கள் அந்த மாதிரிப் புகார்கள் சொல்லுவதையும் கூட நான் கேட்டிருக்கிறேன். அதையும் நான் நம்புவதில்லை.

கனம் சபாநாயகர் : ஷார்ட் நோட்டீஸ் கேள்வி, நம்பர் 2. . .

SRI K. A. MATHIALAGAN : Sir, many hon. Members want to put supplementary questions.

MR. SPEAKER : This is not a debate. This is question hour and the main persons have taken part in it.

திரு. எம். எஸ். மணி : எங்களுக்கெல்லாம் சான்ஸே இல்லை.

கனம் சபாநாயகர் : எனக்கு டிஸ்க்ரீஷன் இருக்கிறது. எந்த அளவுக்கு உப-கேள்விக்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டுமோ அந்த அளவுக்குக் கொடுத்தாகி விட்டது.

Scholarship

* *S.N.Q. No.* 2.—SRI M. S. SELVARAJAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) Whether any representations have been received recently requesting for the provision of eligibility for grant of scholarships to the converted christians from Paravan community included in the list of Most Backward Class; and

(*b*) if so, the action taken thereon ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes.

(*b*) It is under the consideration of the Government.

[9th November 1966

திரு. எம். எஸ். செல்வராஜன் : ஸார், கன்னியாகுமரி ஜில்லாவில் இந்த பரவன் இனத்தைச் சேர்ந்தவர்கள் கிறிஸ்தவர்களாக இருந்தாலும் ஷெட்யூல்ட் வகுப்பினரைப் போல எல்லாச் சலுகைகளும் வழங்கப்படுகிறது என்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ? இதை மற்ற ஜில்லாக்களுக்கு விஸ்தரிக்காமல் இருக்க என்ன காரணம் ?

கனம் திரு. பூ. கக்கன் : முன்பே இதைப்பற்றி விளக்கியிருக்கிறது. கன்னியாகுமரி ஜில்லா ஏற்கெனவே கேரள ராஜ்யத்தில் இருந்தபோது அவர்கள் சலுகைகள் எல்லாம் பெற்று வந்தார்கள். கன்னியாகுமரியை இங்கே சேர்த்தபோது அங்கே எவ்வாறு பாக்வேர்ட், ஷெட்யூல்ட் க்ளாஸஸ் ஆகியவர்களுக்குச் சலுகைகள் கொடுக்கப்பட்டு வந்ததோ அதை அப்படியே கொடுக்கவேண்டும் என்று அந்த ஒப்பந்தத்தில் இருக்கிறது. அதன்படி கொடுக்கப்படுகிறது.

திரு. எம். எஸ். செல்வராஜன் : பரவன் இனத்துக் குழந்தைகள், கிறிஸ்தவர்களாக இருந்தாலும் இத்தகைய ஸ்காலர்ஷிப் வழங்கினுல் உத்தேசமாக எவ்வளவு செலவு ஆகலாம் என்று பரிசீலித்திருக்கிறதா ? அதன் விவரத்தை அளிக்க முடியுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : எத்தனை குழந்தைகள் இருக்கிறுர்கள் என்று பார்க்கவில்லை. இருந்தாலும் குழந்தைகளுக்குக் கல்விச் சலுகை கொடுத்து உதவி செய்ய வேண்டுமென்று தூத்துக்குடியில் மீனவர்க் குழந்தைகளுக்கு ஹாஸ்டலே வைத்து நடத்தி வருகிறேம்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : பரவன் இனம் மோஸ்ட் பாக்வேர்டைச் சேர்ந்தது. அந்தக் குழந்தைகள் கிறிஸ்தவர்களாஞலும் கொடுக்க நினைக்கும்போது மோஸ்ட் பாக்வேர்ட் இனத்தைச் சேர்த்தே அரசாங்கம் பரிசீலிக்கிறதா ? அல்லது பரவன் இனத்திற்கு மட்டும் கிறிஸ்தவர்களாஞலும் கொடுக்க பரிசீலிக்கிறதா ?

கனம் திரு. பூ. கக்கன் : கனம் அங்கத்தினர் கேட்ட கேள்வியைப் பொறுத்த மட்டில் பதில் கொடுத்திருக்கிறேன். அது பற்றித்தான் பரிசீலனை செய்யப்படுகிறது.

STARRED QUESTIONS.

Theft of idols

* 531 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the temples in the State, from which thefts of idols have been reported during the past three years and the description of the said idols; and

(*b*) the steps proposed to be taken and measures to be adopted, to prevent recurrance of such thefts, in future ?